முருகப்பெருமான் துணை

**மகான் சுகப்பிரம்மர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.06.2023, புதன்கிழமை

1. அருமருந்தாக கலியுக மக்களுக்கு
அன்னதான சேவை ஆற்றியே
திருவருளை குருவருள் மூலம்
தரிசிக்க அருளும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் அறிவுரை ஆசி
வரங்களாக சோபகிருது மிதுனதிங்கள்
வல்லமைபட சஷ்டிதிகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 06 ம் நாள், 21.06.2023, புதன்கிழமை)
3. வாரமதில் சுகப்பிரம்மர் யானும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரமில்லா ஞான சமூகம் அமைய
சுத்தநெறி கொண்டு அருளும்
4. அருளும் பிரணவக்குடில் ஞானி
அரங்கமகான் வழிகாட்டலை
வரமென மக்களெல்லாம் ஏற்று
வணங்கிப் பின்பற்றி வர
5. வருகவே கலியின் இடர்கள்
வதையான உயிர்கொலைகளும்
வருமுலகில் அகன்று மேவியே
வள்ளல் தன்மை நிரம்பிட
6. நிரம்பிட மனிதகுணம் மாறி
நீதி நெறி விட்டு அகலா
வரம்போல் அரங்கன் ஆசிபட
வையகத்தார் ஞானவான்களாக

7. ஆகவே சிறந்திட மாற்றம்
அரங்கமகான் அறத்தாலும்
மிகையான தயை சிந்தையாலும்
மேன்மைதனை மக்கள் அடைவர்
8. அடையவே சமூக மாற்றமாக
அனைத்தும் மக்களும் இணைந்திட
தடையற சாதிமத இன பேதமிலா
தரணியோர் சகலரும் அகத்தியர் குலமாம்
9. குலமாம் அரங்கனின் தலைமை
குடையின் கீழ் கலந்துமே
பலமாகி ஞானப்படைகள் பெருக
பாடிடுவேன் உலக மாற்றமாக
10. ஆகவே நல்லத் தலைமையும்
அதிகார வர்க்கங்களும் பண்புடன்
செகமெங்கும் சேவை ஆற்றிட
சித்திமிகு ஞான சபையாகி
11. ஆகியே உலகம் எங்கிலும்
அரங்கன் அமைக்கின்ற நல்
மகிழ்வான ஞான ஆட்சியுமாக
மண்ணுலகில் மாற்றம் காண்கும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–